செ.வெ.எண்:-38/2020 நாள்:15.04.2020

திண்டுக்கல் மாவட்டம்

# மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்து ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள வாகன அனுமதிச் சீட்டுகள், அடையாள அட்டைகள் ஆகியன 03.05.2020 வரை செல்லத்தக்கவை - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றினை தவிர்ப்பதற்காக நாடு முழுவதும் மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தி மத்திய மற்றும் மாநில அரசுகள் தொற்றுநோய் தடுப்புச் சட்டம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் திட்டங்களின்படி பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.

திண்டுக்கல் மாவட்டத்தில் இயங்கி வருகின்ற தொழில் நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலையை இயக்க இயலாத நிலை நிலவியதைத் தொடர்ந்து, அரசின் உத்தரவுப்படி அத்தியாவசியப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விநியோகம், உணவுப் பொருட்கள் உற்பத்தி மற்றும் மருத்துவம் தொடர்பான குறிப்பிட்ட சில நிறுவனங்கள் மீதான தடையை தளர்த்தி அந்நிறுவனங்களை குறைந்த அளவு தொழிலாளர்களுடன் 14.04.2020 வரை தொடர்ந்து நடத்திக்கொள்ள அனுமதித்து திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் உத்தரவிடப்பட்டு, தற்போது அந்நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

தற்போதைய தமிழக அரசின் உத்தரவுகளின்படி, 144 தடை உத்தரவானது வருகின்ற 03.05.2020 இரவு 12.00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, ஏற்கனவே குறைந்த அளவு தொழிலாளர்களுடன் செயல்படக்கூடிய அனுமதி பெற்றுள்ள நிறுவனங்கள் 03.05.2020 வரை தொடர்ந்து இயங்கிட அனுமதிக்கப்படுகிறது. மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்து ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள வாகன அனுமதிச் சீட்டுகள், அடையாள அட்டைகள் ஆகியன 03.05.2020 வரை செல்லத்தக்கவை என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**